தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்

# செய்தி மடல்

செய்தி 16 மடல் 1 ஜனவரி – 2016 ₹1.00

## முன்னேற்றப் பாதையில் ...

### துணைவேந்தரின் செய்தி

பண்ணையாளர்களின் பிரச்சனைகளைக் கவனத்தில் கொண்டு ஆராய்ச்சிகளை மேற்கொள்வது, தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் முக்கியமான குறிக்கோள்களில் ஒன்றாக உள்ளது. இப் பல்கலைக்கழகமானது தங்களின் உணவு மற்றும் வாழ்வாதாரப் பாதுகாப்பிற்கான வருவாயைப் பண்ணையாளர்கள் ஈட்டும் வகையில் கால்நடை மற்றும் கோழியின் உடல்நலத்தைப் பாதுகாக்கவும் அவற்றின் உற்பத்தித்திறனை அதிகரிப்பதற்குமான விலை குறைந்த, பயனுள்ள கருவிகள், தொழில்நுட்பங்கள், பயிற்சி முறைகள், உற்பத்திப் பொருட்கள் ஆகியவை உருவாக்கத்தில் துடிப்புடன் ஈடுபடுகிற கல்வி அறிவு மிக்க ஆசிரியர்களையும், சிறந்த ஆராய்ச்சிக் கட்டமைப்புகளையும் பெற்றிருக்கிறது.



வேலைகள் அதிகரித்து அன்றாடப் பண்ணைச் செயல்பாடுகள் சிக்கலுக்குள்ளாகி இருக்கிற இன்றைய சூழலில், வேலைப்பளுவைக் குறைத்துப் பண்ணையாளர்களுக்கு உதவக்கூடிய, விலை குறைந்த பண்ணை உபகரணங்கள், கருவிகள் ஆகிய இவை பண்ணைப் பொருளாதாரத்தில் முக்கியப் பங்கு வகிக்கின்றன. பண்ணையாளர்களின் தேவையை நிறைவு செய்யும் வகையில் பல்கலைக்கழகமானது பண்ணையாளர் மிக எளிதாகக் கையாளக்கூடிய, பயனுள்ள, விலை குறைவான, வேலைப் பளுவைக் குறைக்கும் கருவிகள், தொழில்நுட்பங்கள், உபகரணங்கள் ஆகியவற்றை உருவாக்கியுள்ளது. மேலும், பண்ணையாளர்களுக்குப் பொருத்தமான கருவிகளை அவர்கள் சோதித்துப் பார்த்து, அவர்கள் சொல்லும் கருத்தை அறிவதற்கும் பண்ணையாளர், பொதுமக்கள் மற்றும் தொழில்முனைவோர்க்குத் தேவையான கருவிகளை உருவாக்கி அவர்களுக்கு வழங்குவதற்கும் "பல்கலைக்கழகத்தின் புதிய கண்டுபிடிப்பு மற்றும் தொழில்நுட்ப மையம்" பல்கலைக்கழக ஆராய்ச்சிப் பண்ணையில் நிறுவப்பட்டுள்ளது. இம் மையம், குறைந்த விலையிலான தண்ணீர் மற்றும் தீவனத் தொட்டிகள், கால்நடைகளை அடையாளங்காண உதவும் கருவி, பண்ணையின் சுற்றுச்சூழலைக் கட்டுப்படுத்தும் கருவி, நீர்த்தெளிப்பான் போன்றவற்றை உருவாக்கி, சோதித்துப்பார்த்து விற்பனை செய்ய இருக்கிறது. மேலும், இம் மையத்தில் செல்லப் பிராணிகளுக்கான கருவிகளும் விற்பனைக்கு உள்ளன.

அனைத்துப் பண்ணையாளர் மற்றும் தொழில்முனைவோர்கள், இந்த மையத்தில் உள்ள வசதிவாய்ப்புகளைப் பயன்படுத்தி மின்சாரம், வேலை நேரம், பண்ணையின் இடுபொருட்கள் இவற்றை மிச்சப்படுத்தித் தங்களின் பண்ணையின் செயல்திறனை அதிகப்படுத்தி அதிக இலாபம் அடையக் கேட்டுக்கொள்கிறேன்.

**முனைவர் சு. திலகர்,**
துணைவேந்தர்

### வெள்ள நிவாரணப் பணிகள் மற்றும் சிறப்புக் கால்நடை மருத்துவ முகாம்கள்



பல்கலைக்கழகத்தின் சிகிச்சையியல் இயக்குநரகமும், விரிவாக்கக் கல்வி இயக்குநரகமும் இணைந்து 38 சிறப்புக் கால்நடை மருத்துவ முகாம்களை வெள்ளம் பாதித்த திருவள்ளூர், காஞ்சிபுரம், கடலூர், நாகப்பட்டினம், விழுப்புரம், தூத்துக்குடி மற்றும் திருவாரூர் மாவட்டங்களின் கிராமங்களில் நடத்தின. பல்கலைக்கழகத்தின் இணைப்பு நிலையங்களான சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி; நாமக்கல், திருநெல்வேலி மற்றும் ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையங்கள்; பல்கலைக்கழக ஆராய்ச்சிப் பண்ணை; காட்டுப்பாக்கம், முதுகலை கால்நடை அறிவியல் ஆராய்ச்சி





நிலையம், கால்நடை உணவியல் நிலையம், வேளாண் அறிவியல் மையம்; விழுப்புரம், கடலூர், தஞ்சாவூர், நாகபட்டினம் மற்றும் வேலூர், கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையங்கள்; காஞ்சிபுரம் மற்றும் திருவாரூர், உழவர் பயிற்சி மையங்கள்; சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியின் கால்நடைப் பேரிடர் மீட்புப் பிரிவு ஆகியவை முகாம்களில் பங்கேற்றன. பசு, எருமை, செம்மறி, வெள்ளாடு, கோழியினம், வாத்துகள், செல்லப் பிராணிகள் என 32,121 கால்நடைகள் முகாம்களால் பயன்பெற்றன. முகாம்களில் நீலநாக்கு நோய், தொண்டை அடைப்பான் நோய், சப்பை நோய் மற்றும் வாத்துகளில் கொள்ளை நோய்க்கு எதிரான தடுப்பூசியும், கோழிகளில் வெள்ளைக்கழிச்சல் நோய்க்கு வாய்வழிக் குருணைத் தடுப்பு மருந்தும், குடற்புழு நீக்கமும், நோயுற்ற கால்நடைகளுக்குச் சிகிச்சையும் அளிக்கப்பட்டன. 5000 கிலோ தனுவாஸ் தாதுப்புக் கலவை, 570 தனுவாஸ் தாதுப்புக் கட்டி, 2 டன் பசுந்தீவனம், அடர் தீவனம், தீவனக் கரணைகள், செல்லப் பிராணி உணவு, மடிவீக்கம் மற்றும் குடல் புண்களுக்கான மூலிகை மருந்துகள் ஆகியவை பண்ணையாளர்களுக்கு வழங்கப்பட்டன. இரத்த மற்றும் சாண மாதிரிகள் சோதித்துப் பார்க்கப்பட்டன. வெள்ளத்திற்குப் பின்னர் கால்நடைகளில் ஏற்படும் நோய்கள் குறித்த விழிப்புணர்வு, வீடியோ காட்சி மற்றும் மடிப்பிதழ்கள்வழி ஏற்படுத்தப்பட்டது. பல்வேறு கால்நடை வளர்ப்பு முறைகள், பசுந்தீவனச் சாகுபடி, அசோலா சாகுபடி குறித்த செயல்முறை விளக்கம், ஊறுகாய்ப்புல் தயாரிப்பு, யூரியா ஊட்டமேற்றப்பட்ட வைக்கோல், பண்ணைகளுக்கான குடிநீர் சுகாதாரம் ஆகியவை கண்காட்சிமூலம் விளக்கப்பட்டன. சிறப்புக் கால்நடை மருத்துவ முகாம்களில் மாண்புமிகு தமிழக மீன்வளத் துறை அமைச்சர் திரு. கே.ஏ. ஜெயபால், அரக்கோணம் சட்டமன்ற உறுப்பினர் மாண்புமிகு திரு. எஸ். ரவி, பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சு. திலகர், பல்கலைக்கழகச் சிகிச்சையியல் இயக்குநர் (பொ.) முனைவர் டி.என். கணேஷ், பல்கலைக்கழக அதிகாரிகள் ஆகியோர் பங்கேற்றனர்.

## துணைவேந்தர்களின் கூட்டம்

“2030ஆம் ஆண்டில் உணவு உற்பத்தியில் உச்ச நிலையை அடைவதற்கு வேளாண்மைப் பல்கலைக்கழகங்களைத் தயார்படுத்துதல்” என்ற தலைப்பிலான 40ஆவது துணைவேந்தர்கள் கூட்டம், 02.12.2015 மற்றும் 03.12.2015ஆம் தேதிகளில் திருப்பதியில் நடைபெற்றது. நிகழ்ச்சியில் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சு. திலகர் அவர்கள் பங்கேற்று, “மாநில வேளாண்மைப் பல்கலைக்கழகங்கள் கடைக்கோடியில் உள்ள விவசாயிகளை அடைவதற்கான மையங்கள்” என்ற தலைப்பிலான அமர்வின் தலைவராகச் செயல்பட்டார். 64 பல்கலைக்கழகங்களின் துணைவேந்தர்கள் கூட்டத்தில் பங்கேற்றனர்.

## தீவனப் பராமரிப்பு மற்றும் உற்பத்தியில் நவீன உத்திகள் பயிற்சி

மத்திய வேளாண் அமைச்சகத்தின் விரிவாக்கக் கல்வி இயக்ககத்தின் நிதி உதவியுடன் “கறவை மாட்டில் தீவனப் பராமரிப்பு மற்றும் உற்பத்தியில் நவீன உத்திகள்” என்ற பயிற்சி, 14.12.2015 முதல் 21.12.2015 வரை நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் கால்நடை உணவியல் துறையில் நடத்தப்பட்டது. பயிற்சியில் விரிவுரைகளும், செய்முறைப் பயிற்சியும், ஊறுகாய்ப் புல் தயாரிப்பு மற்றும் களப் பயிற்சியும் அளிக்கப்பட்டது. இந்தியாவின் பல்வேறு பகுதியிலிருந்து மொத்தம் 20 கால்நடை மருத்துவர்கள் பயிற்சியில் பங்கேற்றனர்.

## தேசிய வேளாண் மேம்பாட்டுத் திட்டப் பயிற்சி

ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் கால்நடை உற்பத்திப் பொருட்கள் தொழில்நுட்பத் துறைமூலம் தேசிய வேளாண் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், “மரபுசார்ந்த பால் பொருட்கள் தொழில்நுட்பம்” குறித்த பயிற்சி, நான்கு தொகுதியாக 30.11.2015 முதல் 22.12.2015வரை நடத்தப்பட்டது. கல்லூரி முதல்வர் முனைவர் க.ந. செல்வகுமார் அவர்கள் முதல் தொகுதிப் பயிற்சியை 30.11.2015அன்று துவக்கிவைத்தார். மகளிர் சுய உதவிக் குழுவைச் சார்ந்த 193 உறுப்பினர்கள் பயன்பெற்றனர். 22.12.2015 அன்று நடைபெற்ற பயிற்சியின் நிறைவு விழாவில் கால்நடை விரிவாக்கக் கல்வித் துறையின் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் அ. முகம்மது சபியுல்லா, தஞ்சை மாவட்ட மகளிர் திட்ட அலுவலர் திருமதி. சந்திரா புஸ்பம், திட்டத்தின் முதன்மை ஆராய்ச்சியாளர் முனைவர் அய்யாவு பிரேம்நாத் மனோகரன், திட்டத்தின் இணை ஆராய்ச்சியாளர் முனைவர் பூ. புவராஜன் ஆகியோர் பங்கேற்றனர்.

## மருந்து உற்பத்தியாளர்கள் மாணவர்கள் சந்திப்பு – 2015




நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் கால்நடை மருந்தியல் மற்றும் நச்சியல் துறையினரால் “மருந்து உற்பத்தியாளர்கள் மற்றும் இறுதி ஆண்டு கால்நடை மருத்துவ மாணவர்கள் சந்திப்பு” 04.12.2015 அன்று நடத்தப்பட்டது. பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் சு. முருகேசன் அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். கல்லூரி முதல்வர் (பொ.) முனைவர் கு. நஞ்சப்பன் அவர்கள் விழாத் துவக்கவுரையாற்றி, கால்நடை மருந்தியல் மற்றும் நச்சியல் துறையில் முதல் இரண்டு மதிப்பெண் பெற்ற மாணவர்களுக்குப் புத்தகங்களைப் பரிசளித்தார். இறுதியாண்டு மாணவர்கள் மருந்து நிறுவனங்களின் காட்சிக்கூடங்களைப் பார்வையிட்டுத் தகவல்கள் சேகரித்தனர்.

## மரக்கன்று நடும் நிகழ்ச்சி



ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் மரக் கன்று நடும் நிகழ்ச்சி, 18.12.2015அன்று நடைபெற்றது. கல்லூரி முதல்வர் முனைவர் க.ந. செல்வகுமார் அவர்கள் மரக்கன்று நட்டு நிகழ்ச்சியைத் துவக்கிவைத்தார். 500க்கும் மேற்பட்ட தேக்கு மரக் கன்றுகளை ஆசிரியர்கள், பணியாளர்கள் மற்றும் மாணவர்கள் நட்டனர்.

## புதிய பல்கலைக்கழக அதிகாரிகள்



**முனைவர் எம். திருநாவுக்கரசு** அவர்கள், திருநெல்வேலி, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் முதல்வராக 31.12.2015அன்று பொறுப்பேற்றார். 22.04.1963இல் தஞ்சாவூர் மாவட்டத்தில் பிறந்த இவர், 1989இல் சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியின் கால்நடைப் பராமரிப்புப் புள்ளியியல் துறையில் உதவிப் பேராசிரியராகப் பணியைத் தொடங்கி, 2000இல் பேராசிரியராகப் பதவி உயர்வு பெற்றார். மேலும், இவர் பல்கலைக்கழகத்தின் தேர்வாணையராக 2012முதல் 2015 வரை பணியாற்றினார். பி.வி.எஸ்சி மற்றும் ஏ.எச். பட்டப் படிப்பிற்கான இணையவழிப் பாடங்களையும், 69 கால்நடை மருத்துவ இணையவழிப் புத்தகங்களையும், பல்வகை வினா வங்கியையும் உருவாக்கியுள்ளார். உயிர் புள்ளியியலில் புதிய எம்.வி.எஸ்.சி. பட்ட மேற்படிப்பை அறிமுகப்படுத்தியதோடு, ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்காகப் பல்வேறு இணைய வசதிகளை உருவாக்கித் தந்துள்ளார். 80 ஆராய்ச்சிக் கட்டுரைகளை வெளியிட்டிருக்கிற இவர், 40 ஆய்வுக் கட்டுகரைகளைக் கருத்தரங்கு / பயிலரங்குகளில் வழங்கியுள்ளார். வேளாண்மைப் பொருளாதாரத்தில் சிறந்த எம்.எஸ்சி (வேளாண்மை) பட்ட மாணவர்க்கான வில்லியம் ஒடங்கோ ஒமமோ விருது, நல்லாசிரியர்க்கான மருதமுத்து மாரியாயி விருது, தமிழ்நாடு அரசின் டான்சா விருது, தேசிய வேளாண் புதிதறி திட்டத்தின் சிறந்த ஆய்வுதவித் திட்ட விருது ஆகியவற்றைப் பெற்றுள்ளார்.



**முனைவர் பி. முருகானந்தன்** அவர்கள் ஒசூர், கோழியின உற்பத்தி மற்றும் மேலாண்மைக் கல்லூரியின் முதல்வராக 31.12.2015அன்று பொறுப்பேற்றுக் கொண்டார். 1980இல் பல்கலைக்கழகப் பணியில் சேர்ந்த இவர், பல்வேறு பொறுப்புகளை வகித்து, 35 ஆண்டுகள் பணியாற்றியிருக்கிறார். புதுக்கோட்டை, மண்டல ஆராய்ச்சி மையம் மற்றும் மதுரை, கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் பரிசோதனை மையத்தில் "ஈமு கோழி ஆராய்ச்சி மையம்" அமைக்கக் கால்நடைப் பராமரிப்புத் துறையிடம் இருந்து ரூபாய் 2.0 கோடி மதிப்பிலான 77.7 சென்ட் நிலத்தைப் பெற்றுத்தந்தார். புதுக்கோட்டை, மண்டல வள மையம் என்பதைப் புதுக்கோட்டை, மண்டல ஆராய்ச்சி மையம் என மாற்றியவர். 35 ஆராய்ச்சிக் கட்டுரைகள், 19 புத்தகங்கள் மற்றும் கையேடுகள், 29 மடிப்பிதழ்கள், 30 துண்டுபிரசுரங்கள் மற்றும் 85 பொதுக் கட்டுரைகளை வெளியிட்டுள்ளார். 29 புறநிலை நிதியுதவித் திட்டங்களைச் செயல்படுத்தியுள்ள இவர், ஆறு விருதுகள் பெற்றுள்ளார்.



**முனைவர் டி. பாஸ்கரன்** அவர்கள் கோடுவெளி, உணவு மற்றும் பால்வளத் தொழில்நுட்பக் கல்லூரியின் முதல்வராகப் 31.12.2015அன்று பொறுப்பேற்றுக் கொண்டார். 31.05.1967இல் தேனி மாவட்டத்தில் பிறந்த இவர் கல்வி, ஆராய்ச்சி, விரிவாக்கம் எனப் பல்கலைக்கழகத்தில் 23 ஆண்டுகள் பணியாற்றியுள்ளார். வேலூர், கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்திற்கு நிரந்தரக் கட்டடம் நிறுவுவதற்குக் காரணமாய் இருந்தார். பெல்ஜியம், கென்ட் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற பயிலரங்கில் பங்கேற்க ஆராய்ச்சியாளராகத் தேர்வுசெய்யப்பட்டார். ஆவினில் சாக்லேட்டுகளை அறிமுகப்படுத்தல் பொருட்டு ஐரோப்பிய யூனியனுக்குச் சென்று வந்துள்ளார். புறநிலை நிதியுதவித் திட்டங்கள்மூலம் பால் புரதம் ஊட்டமேற்றிய குழலப்பங்கள், அனுசரணை உயிரிகள் சேர்ந்த மோர், "வெற்றிலையை மூலமாகக் கொண்டு தயாரிக்கப்படும் உணவு மற்றும் மருத்துவப் பொருள்கள்" ஆகியவற்றை உருவாக்கியுள்ளார். 12 பன்னாட்டு ஆய்வுக் கட்டுரைகளையும், 7 அறிவியல் புத்தகங்களையும், தமிழில் 10 புத்தகங்களையும் வெளியிட்டுள்ளார்.



**முனைவர் ஆர். ஜெயபிரகாஷ்** அவர்கள் பல்கலைக்கழகத்தின் சிகிச்சையியல் இயக்குநராக 31.12.2015அன்று பொறுப்பேற்றுக் கொண்டார். 1982இல் மாநிலக் கால்நடைப் பராமரிப்புத் துறைப் பணியில் சேர்ந்த இவர், 1991இல் பல்கலைக்கழகப் பணியில் இணைந்தார். 2008இல் பேராசிரியராகப் பதவி உயர்வுப் பெற்றார். உலகத் தரத்திற்கு இணையான ஊடுகதிரியக்கவியல் பிரிவைக் கல்லூரியில் உருவாக்கிய சிறப்பிற்குரியவர். இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் "வீட்டுவிலங்குகளில் அறுவைச் சிகிச்சை சூழல்களில் நோய் கண்டறிதல் இமேஜிங்கிற்கான அனைத்திந்திய இணைப்புத் திட்டத்தின்"கீழ் இமேஜ் பகிர்தலுக்கான பிரசிஸ் உருவாக்கியவர். தேசிய மற்றும் பன்னாட்டு அளவில் 56 ஆராய்ச்சிக் கட்டுரைகளையும், 43 பொதுக் கட்டுரைகளையும் வெளியிட்டுள்ளார். கால்நடை அறுவை மருத்துவம் மற்றும் ஊடுகதிரியக்கவியல் துறையில் ஆற்றிய பங்களிப்பிற்காக இவர், பல்வேறு தேசிய விருதுகள் மற்றும் பதக்கங்களைப் பெற்றுள்ளார்.



**முனைவர் வி. ரமேஷ் சரவண குமார்** அவர்கள் பல்கலைக்கழகத்தின் கால்நடை உற்பத்திக் கல்வி மைய இயக்குநராக 31.12.2015அன்று பொறுப்பேற்றுக் கொண்டார். 08.01.1965இல் விருதுநகர் மாவட்டத்தில் பிறந்த இவர், ராணிப்பேட்டை, இந்தியக் கால்நடை நோய்த்தடுப்பு மருந்து தயாரிப்பு நிறுவனத்தில் ஆராய்ச்சி உதவியாளராகப் பணியைத் தொடங்கினார். பின்னர், பல்கலைக்கழகத்தில் உதவிப் பேராசிரியராகப் பணியில் சேர்ந்து, கல்வி, ஆராய்ச்சி, விரிவாக்கம் எனப் பல்வேறு நிலைகளில் 24 ஆண்டுகள் பணியாற்றியுள்ளார். நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் பண்ணைக் கட்டடத்தை நிறுவிய சிறப்புக்குரியவர். 76 ஆராய்ச்சிக் கட்டுரைகளையும், ஒரு புத்தகத்தையும் வெளியிட்டுள்ளார். 10 முதுநிலைப் பட்ட மாணவர்கள் மற்றும் 6 முனைவர் பட்ட மாணவர்களுக்கு ஆய்வு நெறியாளராகச் செயல்பட்டுள்ளார். 2011இல் நல்லாசிரியர் விருதும், 2013இல் சிறந்த புதிதறி விருதும், 2014இல் ஹைதராபாத்தில் உள்ள இந்தியக் கால்நடை உற்பத்தி மற்றும் மேலாண்மைச் சங்கத்தின் தேசிய ஆராய்ச்சியாளர் விருதும் பெற்றுள்ளார்.



**முனைவர் நி.கு. சுதீப்குமார்** அவர்கள் பல்கலைக்கழகத்தின் விரிவாக்கக் கல்வி இயக்குநராக 31.12.2015அன்று பொற்றுப்பேற்றுக் கொண்டார். 11.01.1966இல் பிறந்த இவர், பல்கலைக்கழகத்தில் பல்வேறு பொறுப்புகளில் 23 ஆண்டுகள் பணியாற்றியுள்ளார். தொடுதிரைத் தகவல் மையம், தகவல் தொழில்நுட்பம் அடிப்படையிலான பால்பண்ணை ஆலோசனை முறை, பல்வேறு கால்நடை வளர்ப்பு முறைகள் குறித்த கலந்துரையாடல் டிவிடிக்கள் ஆகியவற்றை உருவாக்கிய சிறப்பிற்குரியவர். இளநிலைப் பட்ட மாணவர்களுக்காகப் புதிய மென்திறன் வளர்த்தல் பயிற்சியையும், வானொலி வேளாண் பள்ளி மற்றும் தொலைக்காட்சியில் தொழில்நுட்பப் பரிமாற்ற நிகழ்ச்சியையும் அறிமுகப்படுத்தியுள்ளார். பன்னாட்டு அளவில் 26 ஆராய்ச்சிக் கட்டுரைகளையும், தேசிய அளவில் 32 ஆராய்ச்சிக் கட்டுரைகளையும் வெளியிட்டுள்ளார். 3 முனைவர் பட்ட மாணவர்களுக்கும், 5 முதுநிலைப் பட்ட மாணவர்களுக்கும் ஆய்வு நெறியாளராகச் செயல்பட்டுள்ளார். முதன்மை ஆராய்ச்சியாளராக இருந்து 5 புறநிலை நிதியுதவித் திட்டத்தினை செயல்படுத்தியுள்ளார். பல்கலைக்கழகத்தின் நல்லாசிரியர் விருதும் 2009இல் பெற்றிருக்கிறார்.

## ஆய்வக நோய்கண்டறிதல் நுட்பங்கள்

பல்கலைக்கழக மைய ஆய்வகம்மூலம் மாநிலக் கால்நடைப் பராமரிப்புத் துறையில் பணியாற்றும் கால்நடை மருத்துவர்களுக்காக

Posted on 03.02.2016 at Pathrika channel, EGMORE, RMS
Date of publication : 02.02.2016

Licensed to post without prepayment No.TN/PMG/(CCR)/WPP-708/15-17
Registration No.TN/TBM/32/2015-17

Registered with Registrar of Newspapers for India No.TN TAM/2001/5254
Posted at Pathrika Channel, Egmore RMS, Chennai - 8.
Printed and Published by
Dr. S.A. Asokan, Ph.D., Director of Distance Education
on behalf of Tamil Nadu Veterinary and Animal Sciences University
and Printed at University Publication Division, Madhavaram Milk Colony,
Mathur Road, Ambathur Taluk, Tiruvallur District, Chennai - 600 051
**Editor : Dr. S.A. Asokan,** M.V.Sc., Ph.D., **Phone : 044-2432 0411**
**E-mail : dde@tanuvas.org.in**

“ஆய்வக நோய்கண்டறிதல் நுட்பங்கள்” குறித்த பயிற்சி, 07.12.2015முதல் 11.12.2015வரை நடத்தப்பட்டது. பயிற்சியில் பங்கேற்ற பதினொரு கால்நடை மருத்துவர்களுக்குக் கால்நடை மற்றும் கோழியின நோய்களில் நவீன நோய்கண்டறிதல் நுட்பங்கள் குறித்து விளக்கப்பட்டது.

### மருத்துவமனை மேலாண்மைக் குழுக் கூட்டம்

மருத்துவமனை மேலாண்மைக் குழுவின் 25ஆவது கூட்டம், பல்கலைக்கழகத்தின் சிகிச்சையியல் இயக்குநரகம்மூலம் 28.12.2015அன்று சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியில் நடத்தப்பட்டது. பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சு. திலகர் அவர்கள் கூட்டத்திற்குத் தலைமை வகித்துச் சிறப்புரை ஆற்றினார். பல்கலைக்கழகப் பதிவாளர் முனைவர் தி.ஜெ. ஹரிகிருஷ்ணன், சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி முதல்வர் முனைவர் சி. பாலச்சந்திரன், திருநெல்வேலி கால்நடை மருத்துவக் கல்லூரி முதல்வர் (பொ.) முனைவர் சே. பிரதாபன், பல்லைக்கழகத்தின் முன்னாள் சிகிச்சையியல் இயக்குநர் முனைவர் கே. அமீர்ஜான், சென்னை, கால்நடைப் பராமரிப்பின் இணை இயக்குநர் டாக்டர் எல். ஆனந்தபத்மநாபன் மற்றும் புறநிலை உறுப்பினர்கள் தூத்துக்குடி, சீனிவாசா சேவை அறக்கட்டளையின் திரு. இ. முருகன், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் பேராசிரியர் முனைவர் டி.என். பாலசுப்பிரமணியன், தமிழ்நாடு மின்சார வாரியத்தின் கண்காணிப்புப் பொறியாளர் திரு. பி. உமாசங்கர் ஆகியோர் கூட்டத்தில் பங்கேற்றுக் கருத்துரை வழங்கினர். பல்கலைக்கழகச் சிகிச்சையியல் இயக்குநர் (பொ.) முனைவர் டி.என். கணேஷ் அவர்கள் பல்கலைக்கழக மருத்துவமனைகளைச் செயற்படுத்துல் வழிமுறைகள் அடங்கிய வரைவுக் கையேட்டைச் சமர்ப்பித்தார். மருத்துவ மேலாண்மைக் குழு வரைவுக் கையேட்டிற்கு ஒப்புதல் வழங்கியது.

### புத்தகக் காட்சி

திருநெல்வேலி, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பணியாளர்களுக்காகப் புத்தகக் காட்சி 29.12.2015அன்று நடத்தப்பட்டது. கல்லூரி முதல்வர் (பொ.) முனைவர் சி. பிரதாபன் அவர்கள் நிகழ்ச்சியைத் துவக்கிவைத்தார். அங்கீகரிக்கப்பட்ட புத்தக விற்பனையாளர்கள் புத்தகக் காட்சியில் பங்கேற்றுப் புத்தகங்களைக் காட்சிக்கு வைத்தனர். அனைத்துத் துறைத் தலைவர்கள், பேராசிரியர்கள், மாணவர்கள் ஆகியோர் நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

### விருது

- கால்நடை நோய் தடுப்பியல் மற்றும் உயிர்த் தொழில்நுட்பவியல் புலங்களில் ஆற்றிய பங்களிப்பை அங்கீகரிக்கும் வகையில் பல்கலைக்கழக மைய ஆய்வகத்தின் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் பரிமள்ராய் அவர்களுக்கு, இந்தியக் கால்நடை நோய் தடுப்பியல் மற்றும் உயிர்த் தொழில்நுட்பவியல் சங்கத்தின் 2015ஆம் ஆண்டிற்கான விருது அளிக்கப்பட்டுள்ளது.
- சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி, உயிர்த் தொழில்நுட்பவியல் துறையின் உதவிப் பேராசிரியர் முனைவர் ச. ரத்னபிரபா அவர்கள் நாட்டிங்காம் பல்கலைக்கழகத்தில் இயங்கும் கால்நடை மருத்துவப்பள்ளியில் “கோழி மற்றும் வாத்துக்களில் பறவைக் காய்ச்சலை உண்டாக்கக் கூடிய நச்சுயிரிகளின் பாஸ்போட்டிடைல் இனோசிட்டால் 3– கைனேஸ் சமிக்ஞை வழித்திறன்” குறித்து ஆராய்ச்சி மேற்கொண்டதற்காக இங்கிலாந்து–இந்தியக் கல்வி மற்றும் ஆராய்ச்சி மும்முனைத் திட்டத்தின் கீழ் விருது அளிக்கப்பட்டது.

### அறிவிப்பு

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் பதினெட்டாம் பட்டமளிப்பு விழா, சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியின் அண்ணா கலையரங்கில் 05.02.2016 அன்று காலை 11.30 மணியளவில் நடைபெறுகிறது. விழாவில் மேதகு தமிழக ஆளுநர் மற்றும் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக வேந்தர் முனைவர் கே. ரோசய்யா அவர்கள், பட்டமளிப்பு விழாவிற்குத் தலைமை வகிக்க அன்புடன் இசைந்துள்ளார்கள். மாண்புமிகு தமிழகக் கால்நடைப் பராமரிப்புத்துறை அமைச்சர் மற்றும் பல்கலைக்கழகத்தின் இணை வேந்தர் திரு. டி.கே.எம். சின்னய்யா அவர்கள் பட்டமளிப்பு விழாவில் பங்கேற்றுச் சிறப்பிக்கவுள்ளார்கள். இந்திய அரசின் வேளாண் மற்றும் உழவர் நல அமைச்சகத்தின் கால்நடைப் பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறையின் கால்நடைப் பராமரிப்பு ஆணையர் பேராசிரியர் முனைவர் சுரேஷ் எஸ். ஹோன்னப்பகோல் அவர்கள் பட்டமளிப்பு விழா உரை நிகழ்த்தவுள்ளார்கள்.

### நாட்டுநலப் பணித் திட்ட நிகழ்வு




ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் செஞ்சுருள் சங்கத்தின் சார்பாக எய்ட்ஸ் நோய் விழிப்புணர்வுக்காகக் கட்டுரை, பாட்டு, பென்சில் ஓவியம், வண்ணம் தீட்டுதல் போட்டிகள் 10.12.2015 அன்று நடத்தப்பட்டன. போட்டிகளில் 70 நாட்டுநலப் பணித்திட்டத் தன்னார்வலர்கள் கலந்து கொண்டனர்.

### பணி ஓய்வு



சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியின் கால்நடை அறுவைச் சிகிச்சை மற்றும் ஊடுகதிரியக்கவியல் துறையின் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் டி.என். கணேஷ் அவர்கள் 31.12.2015அன்று பணி ஓய்வு பெற்றார். 05.12.1955இல் பிறந்த இவர், 28 ஆண்டும் 07 மாதமும் பணியாற்றியுள்ளார்.